**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 211/2021**
**Prosecution Witnesses :8**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேஷ்வரி | Caste | : |
| Husband Name/ Father Name | : ரவி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(22.01.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் சிவரக்கோட்டையில் குடியிருந்து வந்தேன். நான் தற்போது சென்னை சில்க்ஸில் பணியாற்றி வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், அவர் எனது மாமா மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் அந்த இடத்தில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 13.01.2021 அன்று மாலை 3.30 மணியளவில் சிவரக்கோட்டை இருளாயி அம்மன்கோவில் முன்பு வைத்து கார்த்திஸ்வரி அவரது தந்தை தங்கராஜ் தாயர் செல்வி, அவரது அக்கா கோடிஸ்வரி மற்றும் அவரது பெரியப்பா மகன் சந்தனகுமார் என்ற

மணிகண்டன், மற்றும் அ.சா.1 ன் தம்பி சந்தனகுமார் ஆகியோர்கள் இறந்துபோன செண்பகவள்ளியிடம் பங்கு பிரிக்காத சொத்தை ஏன் இடித்தீர்கள் என கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அ.சா.1 மற்றும் அவரது தரப்பை சேர்ந்தவர்களை அசிங்கமாக பேசினார்கள் என்றும் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கார்த்திஸ்வரி, சந்தனகுமார் என்ற மணிகண்டன் மற்றும் கோடிஸ்வரி ஆகியோர்களை எதிரிகள் கலக கூட்டமாக கையில் ஆயுதங்களுடன் ஒன்று சேர்ந்து அசிங்கமாக பேசி அடித்துக் காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து அ.சா.1 ஐ பெண் என்றும் பாராமல் வன்கொடுமை செய்தார்கள் என்றும் நான் அதை நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு பொதுச்சொத்து சம்பந்தமாக பிரச்சினை ஏதும் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை.** இல்லை